1978 செப்டம்பர் 1]

பரமக்குடி பகுதியில் கைத்தறித் துணிகள் தேக்கம்.

*வினு 40—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கிழக்கு ராமனுதபுரம் மாவட்டம், பரமக்குடி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 40 லட்ச ரூபாய் பெறுமான கைத்தறித் துணி தேக்கம் காரணமாக ஏற்பட்டுள்ள வேலை இழப்பு காரணமாக கைத்தறி நெசவாளர்கள் மத்தியில் கொந்தளிப்பான நிலை எழுந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : கிழக்கு இராமநாதபுரம் பரமக்குடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கைத்தறித் துணித் தேக்கம் காரணமாக வேலையிழப்பு இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, நான் கடந்த 30 ஆம் தேதி பரமக்குடி சென்றிருந்தேன். அங்கேயுள்ள கூட்டுறவுச் சங்கங்களிலே சுமார் 40 இலட்ச ரூபாய் அளவுக்கு துணி தேங்கி இருக்கின்றது. இதன் விளைவாக அந்த சங்கத்தினுடைய உறுப்பினர்களுக்கு வேலை கொடுக்கக்கூட முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல: அங்கே கொள்முதல் செய்யப்பட்ட துணிகள் பாதி அளவுக்குக் கூட விற்காத நிலையில் பணம் இல்லை என்று சொல்லப்படுகிறது. எனவே அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் பலர் வேலை இழந்திருக்கிருர்களே, ஆகவே, இதை அமைச்சரவர்கள் கவனித்து துரித நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, 31—7—78 ஆம் தேதிய நிலவரப்படி மேற்கண்ட 35 கூட்டுறவுச் சங்கங்களிடம் ரூ. 38.88 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் இருப்ப இருந்தன. 1—8—78 முதல் 7—8—78 வரையிலான 20 சதவீதம் சிறப்பு தள்ளுபடி காரணமாக மேற்படி சங்கங்கள் ரூபாய் 15.32 இலட்சம் மதிப்புடைய துணிகளை விற்க முடிந்தது. எனவே 8—8—78 ஆம் தேதியன்று ரூபாய் 27.36 இலட்சம் மதிப்புடைய துணிகள் இருப்பு இருந்தது. இதில் ரூபாய்

20 இலட்சம் மதிப்புடைய துணிகள் (Bumber Sarees) 'பம்பர்' சேலை வகையைச் சேர்ந்தவை. வழக்கமாக இந்த ரகச் சேலைகள் தீபாவளியின்போது விற்பனையாவது உண்டு. இந்த 35 சங்கங்களின் மாதாந்திர சராசரி உற்பத்தி ரூபாய் 8.27 இலட்சம் ஆகும். எனவே மேற்கண்ட இருப்பானது மூன்று மாத உற்பத்திக்குச் சமமாகும். எனவே இந்த இருப்பானது சாதாரணமானது என்றே கூறலாம். மேலும், வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கையிருப்பிலுள்ள எல்லாத் துணிகளுமே விற்றுத் தீர்ந்துவிடும். எனவே துணி தேக்கம் அதிகம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, இந்த ஆண்டு துணி தேக்கம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இருக்கின்றது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் மீண்டும் வற்புறுத்திச் சொல்கிறார். தீபாவளிக்கு தள்ளுபடி அதாவது ரிபேட் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால் தீபாவளி வரைக்கும் காத்திராமல் அண்ணா பிறந்த நாள் வருகிறதே அதை முன்னிட்டோ அல்லது பெரியார் நூற்றாண்டு விழா வருகிறதே அதை முன்னிட்டோ அந்த ரிபேட்டை அனவுன்ஸ் பண்ணுவது பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா என்பதுதான்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவரவர்களே, இப்போது சங்கத்தில் சுமார் 24 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள்தான் தேங்கி இருக்கின்றன. அது சாதாரணமான தேக்கம்தான். இராமநாதபுரம் கூட்டுறவு மத்திய வங்கியிலிருந்து சுமார் 61 இலட்ச ரூபாய் காசு கடன் வழங்கப்பட்டிருக்கிறது. துணித் தேக்கத்தைப் பொறுத்தவரையில் இது சாதாரணமானது தான். மேலும் உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற 20 சதவீதம் தள்ளுபடி பற்றிய யோசனையை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]